[8th August 1966

திரு. செ. மாதவன் : இதற்கு அடிக்கல் யாரால் நாட்டப்பட்டது? இதுவும் கைவிடப்படுமா அல்லது நிறைவேற்றப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நாட்டும்போது இன்விட்டேஷன் அனுப்பப்படும்.

* 233 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 465 on 29th March 1966—

(*a*) whether the construction of four additional reservoirs in Tiruchirappalli Municipal area for the supply of drinking water have been completed; and

(*b*) if so, the reasons for the delay in commissioning these reservoirs?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். கட்டிடம் முடிவடைந்தது.

(இ) உறையூரில் (மாவட்டம் 1) உள்ள நீர்த்தேக்கம் 1965, பிப்பிரவரியில், திருச்சிராப்பள்ளி நகராட்சியிடம் ஒப்படைக்கப் பட்டது; இதை இப்போது அந்த நகராட்சியே பேணி வருகிறது. கன்டோன்மெண்ட், பாலக்கரைப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக் கங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றைப் பேணி வருவதற்கு மேற்கொள்ளுமாறு நகராட்சியைக் கேட்டுள்ளோம். உறையூரில் (மாவட்டம் - பி-யில்) உள்ள நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்கிற கிளை பம்பின் மெயின் போடும் பணி முடிந்த பிறகே இந்த நீர்த்தேக்கம் பயன்படும். 'மெயின் லையினின்' ஒரு பகுதி ரயில்பாதை வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. ரயில் பாதைக்குக் கீழே, ரயில்வே அதிகாரிகள் இப்போது குழாய்ப் பாலம் ஒன்றை அமைத்துள்ளனர். குழாய்கள் போடும் பணி நிறை வேறி வருகிறது. விரைவில் இப்பணி முடிவுறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் கட்டியுள்ள நீர்த்தேக்கங் களில் குறிப்பாக உறையூரில் கட்டியுள்ள நீர்த்தேக்கம் திறப்பு விழா செய்யப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகிறது. ஆனல் இதுவரை அங்கிருந்து தண்ணீர் சப்ளை செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரெயில்வே அத்தாரிட்டீஸ் ஒரு கல்வர்ட் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அது முடிந்த பிறகுதான் அத்துடன் இதைச் சேர்த்து நீர்த்தேக்கம் பயன்படும்.

* 234 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to implement any scheme for construction of the Mambazathurai Dam in Kalkulam Taluk for augmenting drinking water supply to Colachal and Padmanabhapuram Municipal areas; and

(b) if so, the details thereof?